DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.No.42/2021**
Prosecution witness **PW.6 (LW.6)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Doctor Vijayakumar | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : | | |

**(Accused A1, A2 present. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 31.07.2025

31.07.2025 முதல் விசாரணை

நான் தற்பொழுது கோபிசெட்டிபாளையத்தில் குடியிருந்து தனியார் முறையில் பீல்டு பிராக்டிஸ் செய்து வருகிறேன்.

1) இதற்கு முன்பு 2020ம் வருடம் குன்னூர் சேலாஸ் கால்நடை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வந்தபோது 07.11.2020ம் தேதி மேற்படி மருத்துவமனையில் பணியிலிருந்தபோது குன்னூர் வனச்சரக அலுவலத்திலிருந்து எனக்கு போன் செய்து சேலாஸ் கொலக்கம்பையிலுள்ள ஒரு எஸ்டேட்டில் சிறுத்தை ஒன்று இறந்துகிடப்பதாகவும் அதை பிரேத பரிசோதனை செய்ய வேண்டுமென்றும் கூப்பிட்டார்கள். சிறிதுநேரத்தில் கேத்தி கால்நடை மருத்துவரான கண்ணன் அவர்கள் தகவலின்பேரில் எங்களது மருத்துவமனைக்கு வந்தார். நாங்கள் இருவரும் சேர்ந்து காலை 10.30 மணிக்கு சிறுத்தை இறந்துகிடந்த எஸ்டேட்டிற்கு சென்றோம்.

2) நாங்கள் சென்று பார்த்தபோது சிறுத்தை ஒன்று கேபிள் ஒயர் கழுத்தில் சுற்றப்பட்ட நிலையில் இறந்துகிடந்தது. அங்கு வனத்துறையை சேர்ந்த அலுவலர்கள் இருந்தார்கள். சம்பவஇடத்தில் வைத்து நானும் மருத்துவர் கண்ணனும் இறந்துபோன சிறுத்தை பிரேத பரிசோதனை செய்தோம். பிரேத

பரிசோதனையில் கேபிள் ஒயர் சிறுத்தையின் கழுத்தில் சுறுக்கு மாட்டி ஏற்பட்ட காயத்தால் இறந்தது தெரியவந்தது. சிறுத்தையின் உடல் உள்ளுறுப்புகளை மாதிரிக்காக எடுத்தோம். பிரேத பரிசோதனைக்கு பிறகு சம்பவஇடத்தில் வைத்து சிறுத்தையின் பிரேதம் எரியூட்டப்பட்டது.

3) இறந்துபோன சிறுத்தையானது அதன் கழுத்தில் சுறுக்கு மாட்டி ஏற்பட்ட காயத்தின் காரணமாக மூச்சுதிணறல் ஏற்பட்டு இறந்தது என்று நான் சான்று வழங்கினேன். **(அந்த பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

<u>குறுக்கு விசாரணை</u> - (எதிரிகள் தரப்பில்)

1) சம்பவம் என்று நடந்தது என்று எனக்கு தெரியாதென்றால் சரிதான். நான் அரசு கால்நடை மருத்துவர் என்பதற்கான அப்பாயிண்ட்மென்ட் ஆர்டரை வனச்சரகரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னை போனில் அழைத்த வனச்சரக அதிகாரியின் பெயர் எனக்கு தெரியாது. சம்பவஇடத்தில் நான் சென்றபோது வனத்துறையை சேர்ந்த அலுவலர்கள் இருந்தார்கள். ஆனால் எத்தனை பேர் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக என்னை யாரும் விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் சம்பவஇடம் சென்று பிரேத பரிசோதனை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றும் வனத்துறை பதிவுசெய்த பொய்வழக்கிற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

//ஒம்.//R.அப்துல் சலாம்,
நீதித்துறை நடுவர்,
குன்னூர்.